# 06-12-2024 செய்தி

## சிறிய, நடுத்தர அளவிலான தொழில்கள்

- சிறிய, நடுத்தர அளவிலான தொழில்கள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப்பங்கு வகிக்கின்றன.
- பொருளாதாரத்தின் அங்கமாக விளங்கும் துறைமுகங்கள் மேம்பாடு, ஏற்றுமதி, வேலைவாய்ப்பை உருவாக்குதல் ஆகியவற்றில் இந்நிறுவனங்கள் குறிப்பிடத்தகுந்த பங்கு வகிக்கின்றன.
- இந்தியத் தொழில் துறையில் 45% உற்பத்தி 40% ஏற்றுமதியில் பங்கு வகிக்கும் இந்நிறுவனங்கள் 11 கோடிக்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு வேலை வழங்குகின்றன.

**கிராமப்புறங்களில்.....**

- இந்தியாவின் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்கள் துறையானது குடிசை, சிறிய, நடுத்தரத் தொழில்கள் என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.
- குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்கள் அமைச்சகத்தின், (Ministry of Micro, Small & Medium Enterprises) 2023ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, இந்தியாவில் சுமார் 6.3 கோடி குறு, சிறு – நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சிறிய தொழிற்கூடங்கள் 96%) இவற்றில் 3.5 லட்சம் சிறிய தொழில்கள், 60,000 நடுத்தரத் தொழில்கள் உள்ளன. தேசிய மாதிரி ஆய்வின்படி (73 ஆவது சுற்று), சிறிய, நடுத்தர அளவிலான தொழில்களில் பெரும் பாலானவை கிராமப்புறங்களில் உள்ளன.
- குறிப்பாக, விவசாயம் தொடர்பான நடைமுறைகள், கைவினைப் பொருள்கள், சிறிய அளவிலான உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு நிறுவனங்கள் உள்ளன. நகர்ப்புறங்களில் சேவைகள், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் ஈடுபட்டுள்ள குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்களும் இதில் அடங்கும்.
- குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்கள் அமைச்சகத்தின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இந்தியாவின் 51% குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்கள் கிராமப்புறங்களில் உள்ளன.
- இதில், 3.23 கோடி நிறுவனங்கள் விவசாயம் தொடர்பான தொழில்களில் கைவினைப் பொருள்கள், உணவுப் பொருள்கள் உற்பத்தி, சிறிய அளவிலான உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டுள்ளன.
- மற்ற 49% நிறுவனங்கள் நகர்ப்புறங்களில் உள்ளன. இதில் தகவல் தொழில் நுட்பச் சேவைகள், உற்பத்தி, துணி, பொறியியல் தொழில்கள் முதன்மையாக உள்ளன.

**சமூக மாற்றத்துக்குப் பங்களிப்பு**

- பாலினச் சமத்துவத்தை ஊக்குவிப்பதில் குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்கள் துறையின் பங்கு மிக முக்கியமானது, குறிப்பாகத் துணி உற்பத்தி, கைவினைப் பொருள்கள், உணவுப் பொருள் தயாரிப்பு, அழகு சாதனப் பொருள் உற்பத்தி, சேவைத் துறை போன்ற துறைகளில் பெண்களுக்கு வேலை வழங்கிவரும் துறை இது, இத்துறையில் பெண்கள் பங்கேற்பு 20–30% என்பது கவனிக்கத்தக்கது.
- மேலும், பல்வேறு தொழில்களில் பரந்த பரிமாணங்களையும் இத்துறை கொண்டிருக்கிறது. இது உற்பத்தி, ஏற்றுமதி, வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ஆடை தயாரிப்பு, பட்டு, நெசவு கருவி தயாரிப்பு, ஒப்பனைப் பொருள் உற்பத்தி போன்றவை இதில் முக்கியமானவை.
- இந்தியாவில் தயாராகும் கைவினைப் பொருள்கள் உலக அளவில் புகழ்பெற்றவை, மரக்கடைகள், மணிக் கண்ணாடிகள், நகைகள், உலோகக் கலைப்பொருள்கள், ஓவியப் பொருள்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முக்கியப் பங்காற்றி வருகின்றன.
- உணவு பதப்படுத்துதல் தொழிலில், ஏற்றமதிக்கும் உள்ளூர் சந்தைக்கும் ஏற்ற உணவுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.
- கடலை உருண்டைகள், பழரசம், மிளகு, மசாலா வகைகள் போன்ற பண்டங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. பொறியியில் கருவிகள், உலோகக் கருவிகள், ஆட்டோ உதிரி பாகங்கள், மின்னணுப் பொருள்கள், ரசாயனப் பொருள்கள், மருந்துகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

**தமிழ்நாட்டின் நிலவரம்**

- இந்திய அளவில் தொழில்நுட்பத்தில் வளர்ந்த மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சிறிய, நடுத்தர அளவிலான தொழில்கள், மாநிலத்தின் தொழில் துறை உற்பத்தி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி ஆகியவற்றோடு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் மையமாக உள்ளது.

- 15 லட்சத்துக்கும் மேற்பட்ட குறு, சிறு, நடுத்தர அளவிலான தொழில்களைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. 2021-2022இல் இத்தொழில்கள் மாநிலத்தின் தொழில் உற்பத்தியில் 40% பங்கு வகித்தன.
- கார் உற்பத்தி, அதன் உதிரி பாகங்கள் தயாரிப்பு, துணி, தோல் பொருள்கள், உணவுப் பொருள் பதப்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.
- தமிழ்நாட்டின் ஏற்றுமதி ஆண்டுதோறும் ரூ.25 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்கள் குறிப்பாக ஆடை, தோல், பொறியியல் சாதனங்கள், உணவுப் பொருள்கள் ஆகிய துறைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- அதேவேளையில், முதலீடுகளின் பற்றாக்குறை தொழில்நுட்பம், ஒழுங்குமுறை, அடித்தளப் பிரச்சினைகள், மனிதவளச் சவால்கள் என இந்தத் தொழில் துறைகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றன.
- இந்தச் சூழலில் இந்நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியம்.

## அன்னபூர்ணா தேவி

- இந்தியாவில் ஐந்தில் ஒரு பெண் குழந்தைக்கு 18 வயது நிரம்புவதற்கு முன்பாகவே, திருமணம் செய்து வைக்கப்படுகிறது என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி தெரிவித்திருக்கிறார்.
- இந்தியா எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால்களில் ஒன்று, குழந்தைத் திருமணங்கள் என்று தெரிவித்திருக்கும் அமைச்சர் அன்னபூர்ணா தேவி குழந்தைத் திருமணம் இல்லாத இந்தியா என்கிற திட்டத்தை அண்மையில் அறிவித்திருக்கிறார். 2023ஆம் ஆண்டில் மட்டும் 2 லட்சம் குழந்தைத் திருமணங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன.
- குழந்தைத் திருமணம் என்பது சட்டப்படி கிரிமினல் குற்றம் என்பது மட்டுமல்லாமல் மிக மோசமான மனித உரிமை மீறலும்கூட குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் இருந்தாலுமகூட மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டால் மட்டுமே.
- இந்த அவலத்துக்கு முடிவு ஏற்படும் என்கிற அமைச்சரின் கருத்தை வழிமொழியத் தோன்றுகிறது.
- குழந்தைத் திருமணம் இல்லாத இந்தியா திட்டத்தின் மூலம் தற்போதைய அளவிலிருந்து குழந்தைத் திருமணங்களை 35% குறைப்பது உடனடி இலக்கு 2029-க்குள் 5 சதவீதத்துக்கும் குறைவாக குழந்தைத் திருமணங்களைக் கட்டுக்குள் கொண்டுவருவது அடுத்த இலக்கு. இத்திட்டத்தின்படி, எல்லா மாநில, ஒன்றியப் பிரதேசங்களும் அந்தந்த மாநிலத்துக்கு ஏற்றாற்போல இலக்கை நிர்ணயித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- குழந்தைத் திருமணங்கள் மிக அதிகமாக நடைபெறும் மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், ராஜஸ்தான், திரிபுரா, அஸ்ஸாம், ஆந்திரபிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் கவனக்குவிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இந்திய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு இயக்கம் என்கிற தன்னார்வ நிறுவனத்தினர் நடத்தியிருக்கும் ஆய்வின்படி, இந்தியாவில் ஒவ்வொரு நிமிஷத்திலும் 3 சிறுமிகளுக்கு குழந்தைத் திருமணம் நடைபெறுகிறது.
- ஆனால், குழந்தைத் திருமணம் தொடர்பாக நாளொன்றுக்கு மூன்று வழக்குகள் மட்டுமே பதியப்படுகின்றன. உலகளாவிய அளவில் 47% குழந்தைத் திருமணங்கள் தெற்காசியாவில்தான் நடைபெறுகின்றன.
- அவற்றில் 34% இந்தியாவில் நடப்பதாக இன்னொரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.
- குழந்தைத் திருமணங்களைத் தவிர்க்கவும் அதற்கு உதவியாக இருப்பவர்களைத் தண்டிக்கவும் 2006-இல் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது.
- அதன்படி, குழந்தைகளுக்குத் திருமணம் நடத்துபவர்கள், அதைத் திட்டமிடுபவர்கள், அந்த திருமணச் சடங்குகளை நிகழ்த்துபவர்கள் ஆகியோருக்கு அதிகபட்சமாக 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை அல்லது ரூ. 1 லட்சம் அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படுவதற்கு அந்தச் சட்டம் வழிகோலியது.
- திருமணத்தை நிகழ்த்தி வைப்பவர்கள் குழந்தைத் திருமணம் என்பது தெரியாததால் நிகழ்த்தியதாக நிரூபித்தால், தண்டனையில் இருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படலாம் என்கிறது சட்டம்.
- குழந்தைத் திருமணங்கள் நகரங்களைவிட கிராமங்களில்தான் அதிகமாகப் பதிவாகின்றன. ஊரகப் பகுதிகளில் 27% குழந்தைத் திருமணம் நடைபெறுகிறது என்றால், நகரங்களில் 15% நடைபெறுகிறது.
- குழந்தைத் திருமணத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அஸ்ஸாம் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. 2021-22-இல் அங்கு 3,225 குழந்தைத் திருமணங்கள் பதிவாகின என்றால், அந்த எண்ணிக்கை 2023-24-இல் 627-ஆக குறைந்தது.
- 2023- இல் மட்டும் 3,000 கைது நடவடிக்கைகளை அஸ்ஸாம் அரசு மேற்கொண்டதுதான் அதற்குக் காரணம்.
- குழந்தைத் திருமண வயதை 18- இலிருந்து 21- ஆக உயர்த்த ஹிமாசல பிரதேச சட்டப்பேரவை சட்டம் நிறைவேற்றியிருக்கிறது.
- இதன் மூலம் பதின்ம வயதுப் பெண்களின் திருமணம் தடைசெய்யப்படுகிறது. அதனால் குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தில் இருந்து யாரும் எளிதில் தப்பிவிட முடியாது.

SURESH'